2017 ஜூன் 22]

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த அகஸ்தீஸ்வரம் மருத்துவமனைக்கு உடனடியாக மருத்துவர்கள் நியமிக்கப்படுவார்கள். பொதுவாக TNPSC மூலமாகத்தான் மருத்துவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். காலதாமதம் ஏற்படக் கூடாது என்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தனியாக MRB மருத்துவப் பணியாளர் தேர்வு ஆணையத்தை இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத ஆணையத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்திலே உருவாக்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆணையத்தின் மூலம் இதுவரை இருபதாயிரம் மருத்துவர்கள் குறுகிய காலத்தில் பணி நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இப்பொழுதும் கலந்தாய்வு நடந்துகொண்டிருக்கிறது. தமிழ்நாடு முழுக்க இருக்கின்ற அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் உள்ள காலிப் பணியிடங்கள், மேற்படிப்புக்காகச் சென்றதில் ஏற்பட்ட காலிப் பணியிடங்கள் எல்லாவற்றுக்கும் இந்த வாரத்தில் மருத்துவர்கள் தேர்வு செய்யப்பட்டு, நியமனம் செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் அகஸ்தீஸ்வரம் மருத்துவமனையும் கருத்தில் கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 67, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

67—

வேளாண்மை விதைப் பண்ணை

***5132— திரு. வி. ராதாகிருஷ்ணன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை தொகுதியில் வேளாண்மை விதைப் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 11–15

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை தொகுதியை உள்ளடக்கிய நாகை மாவட்டத்தில் நாகமங்கலம், திருக்கடையூர் அரசு விதைப் பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. நாகப்பட்டினம் மாவட்ட விவசாயிகளுக்குத் தேவையான விதைகள் இப்பண்ணைகள்மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. எனவே, மயிலாடுதுறை தொகுதியில், வேளாண்மை விதைப் பண்ணை அமைக்க அரசிடம் பிரேரணை ஏதும் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன் அவர்கள்.

திரு. வி. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஓய்வு நான் அறியாதது! உழைப்பு என்னை விட்டு நீங்காதது' என வாழும் காலமெல்லாம் ஓய்வறியாமல் தமிழக மக்களுக்காக உழைத்து, நம்மையெல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு மறைந்து, நம் நெஞ்சங்களில் என்றென்றும் தெய்வமாக வீற்றிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

குறுவை தொகுப்புத் திட்டத்தில், இயந்திர நடவுக்கு ஏக்கருக்கு ரூ.4,000/– zinc sulphate, நுண்ணூட்டச்சத்து மற்றும் உளுந்து 8 கிலோ மானியமாக வழங்கி விவசாயிகளுக்கு மறுவாழ்வு தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை ஒன்றுபட்ட தஞ்சை மாவட்ட விவசாயிகளின் சார்பாகவும், என்னுடைய மயிலாடுதுறை தொகுதி மக்களின் சார்பாகவும், விவசாயி என்ற முறையில் எனது சார்பாகவும் பாராட்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை தொகுதி பெரும்பாலும் விவசாயத் தொழிலை நம்பியுள்ள பகுதியாகும். இந்தத் தொகுதியில் ஒவ்வோர் ஆண்டும் 4,000 ஹெக்டேர் பரப்பளவில் குறுவை சாகுபடியும், கடந்த

2017 ஜூன் 22]

ஆண்டில் 6,500 ஹெக்டேர் பரப்பளவில் சம்பா சாகுபடியும், 11,000 ஹெக்டேர் பரப்பளவில் தாளடி சாகுபடியும் செய்து வருகின்றனர். இத்தொகுதியில் உள்ள விவசாயிகள் அதிக விலை கொடுத்து விதைகளை தனியாரிடமிருந்து வாங்கி விவசாயம் செய்கின்றனர். இவ்விதைகள் பெரும்பாலும் தரமற்ற விதைகளாக இருப்பதால், மகசூல் பாதிக்கப்பட்டு, விவசாயிகள் பெரும் நஷ்டத்திற்கு ஆளாகின்றனர். எனவே, மயிலாடுதுறை தொகுதியிலுள்ள விவசாயிகள் பயன்பெறும்வகையில், வேளாண்மை விதைப் பண்ணை அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 34 அரசு விதைப் பண்ணைகளும், 6 மாநில எண்ணெய்வித்துப் பண்ணைகளும் ஒரு மாநில பயிர் பெருக்குப் பண்ணையும் அமைக்கப்பட்டு, விவசாயிகளுக்கு வழங்குவதற்காக விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

மேலும், நாகப்பட்டினம் மாவட்டத்தில், ஓர் ஆண்டிற்கான நெல் விதை தேவை மற்றும் பயறு விதை தேவை முறையே 1,200 மெட்ரிக் டன் மற்றும் 475 மெட்ரிக் டன் ஆகும். நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள இரண்டு அரசு விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்ட நெல் விதைகளின் அளவு 1,400 மெட்ரிக் டன் மற்றும் பயறு விதைகளின் அளவு 600 மெட்ரிக் டன் ஆகும். நாகப்பட்டினம் மாவட்டத்திற்குத் தேவையான விதை அளவைவிட இவ்விரு பண்ணைகளில் அதிகமாக உற்பத்தி செய்யப்படுவதால், மயிலாடுதுறை தொகுதியில் தனியாக வேளாண்மை விதைப் பண்ணை அமைக்கும் பிரேரணை ஏதும் அரசிடம் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், அவர்கள் தனியாரிடம் வாங்கும் விதைகளில் குறைகள் இருப்பதால்தான், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நேரடியாக விவசாயிகளுக்கு விதைகள் சென்றடைவதற்காக, வேளாண்மைத் துறை மூலமாக விவசாயிகளுக்கு விதைகளை வழங்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே,

விதைப் பண்ணைகள்மூலம் அந்த விதைகளை விவசாயிகள் பெற்றுக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு, இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அரசில், விவசாயிகளுக்குத் தேவையான அனைத்து உபகரணங்களையும், அனைத்து தேவைகளையும் நிவர்த்தி செய்து கொண்டிருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல், வறட்சி நிவாரணம், காப்பீட்டுத் தொகை அத்துணையும் வழங்கி வருகிறார்கள். அப்படிப்பட்ட ஒரு புனிதமிக்க ஆட்சி நடக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட, தனிப்பட்டமுறையில், வேளாண்மைத் துறைக்கு மட்டும் 56 கோடியே 92 இலட்சம் ரூபாயை குறுவை தொகுப்புத் திட்டத்திற்கு வழங்கி, விவசாயிகளின் வயிற்றில் பாலை வார்த்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆகவே, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில், அந்த விவசாயிகளுக்கு வாழ்வளித்து வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்செல்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. வி. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.*

திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மேல்செங்கத்தில் சுமார் 12,000 ஏக்கர் பரப்பளவுள்ள மாநில பண்ணை கடந்த காலங்களிலே சிறப்பாக விதை உற்பத்தியையும், நாற்றங்கால் உற்பத்தியையும் செய்து வந்தது. இப்போது அந்தப் பண்ணை வனத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதிலே, நீலகிரித் தைல மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளதால், செங்கம் பகுதியிலே*

2017 ஜுன் 22]

நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த அரசு அங்கு ஒரு வேளாண்மை பல்கலைக்கழகத்தையோ அல்லது அரசு அறிவித்த நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை நிலையத்தையோ உருவாக்கித் தர முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில் அந்தியேந்தலிலும், செங்கம் தொகுதியில் வாழவச்சனூர் தண்டராம்பட்டு பகுதியிலும் மாநில அரசின் சார்பில் விதைப் பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. அங்கிருந்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேவையான அளவுக்கு விதைகளைப் பெற்றுக்கொள்ளலாம். அதில் ஏதாவது குறைகள் தற்போது இருந்தால், அதை நீங்கள் எங்களுக்குத் தெரிவித்தால், அதன்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 68, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

68—

ஆவின் பாலகம்

***4015—திரு. செ. ராஜேஷ் குமார்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிள்ளியூர் தொகுதி, விளவங்கோடு வட்டம், மிடாலம் ஊராட்சி, உதய மார்த்தாண்டத்தில் உள்ள ஆவின் பாலகத்தை மீண்டும் செயல்படுத்த அரசு முன்வருமா?